# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.49/2024

## அ.சா. 4 (LW 21)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **Dr.அனிதா** | **தொழில்** | **கண் மருத்துவர்** |
| **க / பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **19.06.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இளநிலை உள்ளிருப்பு கண் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.03.2023 அன்று திண்டுக்கல் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியிலிருந்த போது பிற்பகல் 02.35 மணி அளவில் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கலிக்கம்பட்டி, கிழக்கு தெருவைச் சேர்ந்த கருப்பையா என்பவரின் மகன் தர்மராஜ் என்பவரை இறந்த நிலையில் சின்னாளபட்டி காவல்நிலைய கிரேடு –1 2140 ராஜேஷ்கண்ணா என்பவர் கொண்டு வந்தார் என்பதை விபத்து பதிவேட்டில் பதிவு செய்து பின்பு பிரேதத்தை பரிசோதனை செய்து பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் மருத்துவ கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு எண். 2580349, மருத்துவமனை எண். 27738ஆக பதிவு செய்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு நகல் **அ.த.சா.ஆ.2.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

பிரேதத்தை எந்த இடத்திலிருந்து கொண்டு வந்ததாக காவலர் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. காவலர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் வழக்கின் குற்ற எண். சட்ட பிரிவுகள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் கவனிக்கவில்லை. வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் பற்றி பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரேத்தின் இருந்த காயங்களின் விவரம் நான் வழங்கிய விபத்து பதிவேட்டில் காணப்படவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.22 18:49:29 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.